
தினத்தந்தி



ஈரோடு அருகே பி.பி.அக்ரஹாரம் நஞ்சை தளவாய்பாளையத்தில் காலிங்கராயன் வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டு ஆர்ப்பரித்தபடி தண்ணீர் வெளியேறியக் காட்சி.



காலிங்கராயன் வாய்க்காலில் ஏற்பட்ட உடைப்பால் வீடுகளை வெள்ளம் சூழ்ந்திருந்த காட்சி.

### ஈரோடு மாவட்டத்தின் 750 ஆண்டுகள் பழமையான

# காலிங்கராயன் வாய்க்காலில் திடீர் உடைப்பு

## 100 ஏக்கர் நெற்பயிர் வெள்ளத்தில் மூழ்கின

ஈரோடு, பிப்.17–

ஈரோடு மாவட்டத்தில் 750 ஆண்டுகள் பழமையான காலிங்கராயன் வாய்க்காலில் நேற்று அதிகாலை ஏற்பட்ட திடீர் உடைப்பு காரணமாக 100 ஏக்கர் நெற்பயிர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

### மிகவும் பழமையான வாய்க்கால்

ஈரோடு மாவட்டத்தில் மிகவும் பழமையான பாசன வாய்க்காலாக விளங்குவது காலிங்கராயன் வாய்க்கால். காலிங்கராயன் என்பவர், அவருடைய சொந்த நிதியில் இந்த வாய்க்காலை வெட்டி, பவானி முதல் கொடுமுடி வரையிலான விவசாயிகள் பயன்பெறும் வகையில் அமைத்துக்கொடுத்தார்.

12 ஆண்டுகளாக வெட்டப்பட்ட இந்த வாய்க்கால் 1265–ம் ஆண்டு தை மாதம் முதல் தேதியன்று ஈரோடு மாவட்ட விவசாயிகளின் பயன்பாட்டுக்கு வந்தது. பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி தண்ணீரை திருப்பி வாய்க்கால் மூலம் கொடுமுடி அருகே உள்ள ஆவுடையார் பாறை வரை 56½ மைல் தூரம் பாய்ந்து செல்கிறது. தமிழகத்தில் முதல் முறையாக பவானி ஆற்றையும், நொய்யல் ஆற்றையும் இணைக்கும் வகையில் 750 ஆண்டுகளுக்கு முன்பாகவே வெட்டப்பட்ட காலிங்கராயன் வாய்க்கால் இதுவரை ஈரோடு மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தின் வாய்க்காலாக இருந்து வருகிறது.

### 15 ஆயிரம் ஏக்கர்

இதன் மூலம் காலிங்கராயன்பாளையத்தில் இருந்து ஆவுடையார்பாறை வரை சுமார் 15 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாசனம் பெறுகிறது. நெல், மஞ்சள், கரும்பு, வாழை என்று பலவகை பயிர்களையும் விளைவிக்கும் காலிங்கராயன் வாய்க்காலில் ஆண்டுக்கு 10½ மாதம் வரை தண்ணீர் பாய்ந்தோடுவதே இதன் சிறப்பம்சமாகும்.

இத்தகைய பழமை வாய்ந்த காலிங்கராயன் வாய்க்காலின் பாசனத்தால் மூன்று போகமும் நெல் விளைந்து வருகிறது. முதல் போகம் முடிந்து 2–ம் போகத்துக்கான நடவு பணிகள் கடந்த மாதம் தொடங்கியது. கடைமடை பகுதிவரை விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்கவேண்டும் என்பதால் வாய்க்காலில் தண்ணீர் அதிக அளவு திறக்கப்பட்டு இருந்தது. வாய்க்காலின் கொள்ளளவு 584 கன அடி ஆகும். தற்போது காலிங்கராயன்பாளையம் அணைக்கட்டில் இருந்து வாய்க்காலில் வினாடிக்கு 578 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது.

### திடீர் உடைப்பு

வாய்க்காலின் 2 கரைகளையும் தொட்டு கடந்த ஒரு மாதமாக தண்ணீர் கரைபுரண்டு ஓடிக்கொண்டு இருந்தது. இந்த நிலையில் நேற்று அதிகாலை 5.30 மணி அளவில் ஈரோடு பி.பி.அக்ரகாரம் பகுதியில் காலிங்கராயன் வாய்க்காலில் திடீர் உடைப்பு ஏற்பட்டது. சுமார் 40 அடி நீளத்துக்கு வாய்க்காலின் கரை முழுவதுமாக அடித்துச் செல்லப்பட்டது. இதனால் வாய்க்கால் தண்ணீர் வயல் வெளியில் புகுந்து காட்டாறு போல பெருக்கெடுத்து சீறிப் பாய்ந்தது. கண் இமைக்கும் நேரத்தில் அந்த பகுதியில் உள்ள வயல்வெளியில் வெள்ளம் கடல்போல பரவியது. எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடாக மாறியது. நடவு செய்து 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரையிலான நெல் நாற்றுகள் தண்ணீரில் மூழ்கின.

இதற்கிடையே காலை நேரத்தில் வயல்களுக்கு வந்த விவசாயிகளும், வாய்க்காலுக்கு வந்த பொதுமக்களும் கரை உடைந்து தண்ணீர் வீணாக போவதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். உடனே விவசாயிகள் தங்கள் வயல்களின் அடையாளம் தெரியாமல் ஓடினார்கள். கஷ்டப்பட்டு, கடன் பட்டு நடவு செய்த நெல் நாற்றுகள் திடீரென்று சில மணி நேரத்தில் தண்ணீரால் அடித்துச்செல்லப்பட்டதை பார்த்து கண் கலங்கினார்கள். சில விவசாயிகள் தங்கள் வயல்களுக்குள் சென்று நாற்றுகளை பிடுங்கி பார்த்தனர்.

### 100 ஏக்கர் நெற்பயிர் மூழ்கியது

வாய்க்காலில் இருந்து வெளியேறிய தண்ணீரால் வயல்களில் வெள்ளம் முட்டளவு தேங்கியது. தண்ணீரின் ஓட்டம் இருந்த இடங்களில் காட்டாறு போல வெள்ளம் பாய்ந்து ஓடிக்கொண்டே இருந்தது, வயல்கள் ஓடையாக மாறியது. திடீர் உடைப்பால் ஏற்பட்ட வெள்ளத்தில் அந்த பகுதியில் சுமார் 100 ஏக்கர் நெற்பயிர் தண்ணீரில் மூழ்கியது. காலிங்கராயன் வாய்க்கால் கரையில் இருந்து பார்த்தபோது, எங்கும் வெள்ளக்காடாக காட்சி அளித்தது.

வயல்களில் மட்டுமின்றி பரந்து விரிந்து சென்ற வெள்ளம், அந்த பகுதியில் இருந்த செங்கல் சூளைகளையும் விட்டு வைக்கவில்லை. செங்கல் சூளைகளையும் வெள்ளம் சூழ்ந்தது. அங்கு சமீபத்தில் உற்பத்தி செய்யப்பட் 5 லட்சம் செங்கல்கள் சூளையில் வைத்து சுடுவதற்கு தயாராக வைக்கப்பட்டு இருந்தது. ஆனால், வெள்ளம் புகுந்ததால் அந்த செங்கல்கள் முழுமையாக நாசமாயின.

### செங்கல் சூளை–வீடுகள்

செங்கல் சூளையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அதே பகுதியில் குடிசை கட்டி வசித்து வருகிறார்கள். சுமார் 20 குடிசைகளில் 50–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வசித்து வருகிறார்கள். இந்த வீடுகளையும் வெள்ளம் சூழ்ந்தது. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால், அங்கு குடியிருக்கும் தொழிலாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளானார்கள்.

இந்த வீடுகளில் உள்ள பள்ளிக்கூட குழந்தைகளின் புத்தகங்கள் அனைத்தும் வெள்ளத்தில் நனைந்தன. திடீர் வெள்ளப்பெருக்கால் அதிர்ச்சி அடைந்த தொழிலாளர்கள் வேகமாக வீடுகளில் இருந்து வெளியேறி மேடான பகுதியில் சென்று பாதுகாப்பாக உட்கார்ந்து கொண்டனர்.

### அதிகாரிகள் விரைந்தனர்

வாய்க்காலில் ஏற்பட்ட உடைப்பு குறித்து தகவல் அறிந்த ஈரோடு மாவட்ட பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பிரகலாதன் தலைமையில் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். மேலும், உடனடியாக காலிங்கராயன் பாளையம் அணையில் இருந்து தண்ணீர் வெளியேறாமல், மதகுகளை அடைத்தனர்.

இருந்தாலும் 7 மைல் தூரத்தில் இருந்து தண்ணீர் பாய்ந்து வந்ததால் மாலைவரை தண்ணீர் முழுமையாக வடியவில்லை. தகவல் அறிந்து பொதுப்பணித்துறை கோவை மண்டல தலைமை பொறியாளர் சிவசங்கரன், ஈரோடு ஆர்.டி.ஓ. சுகுமார், ஈரோடு மாவட்ட வேளாண்மை இணை இயக்குர் அக்பர் ஆகியோரும் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டனர். வாய்க்காலின் உடைப்பை சரிசெய்ய பொதுப்பணித்துறை அதிகாரிகள் களிமண், சரளைக்கல் மற்றும் மணல் மூட்டைகளை தயாராக வைத்து இருந்தனர்.